விண்ணபிக்க வசதி செய்யும் வகையில் அதற்கான வயது வரம்பினை அப்படிப்பட்டவர்களுக்கு 40 வரை உயர்த்தலாம் என்ற செயற் குறிப்பு ஒன்று அரசின் ஆய்விலுள்ளது.

Teacher-pupil ratio

* 274 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether there is any proposal to reduce the teacher-pupil ratio in the elementary schools of this State; and

(*a*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) முன்பு இருந்ததைவிட இப்பொழுது விகிதாச்சாரம் கணிசமாகக் குறைந்துள்ளது.

(ஆ) மேலும் குறைப்பதற்கான திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணியைச் சேர்ந்தவர்கள் 25 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் விதம் நியமனம் செய்வதின்மூலம் கல்வியின் தரத்தை உயர்த்தவும் அதிகப்படியான ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவும் முடியும் என்று ஆலோசனை கூறியிருக்கிறார்களே, அதைப்பற்றி அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சராசரி விகிதம் 1 : 35 அதாவது ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற அளவிலேதான் இருக்கிறது. அந்த எண்ணிக்கையை மேலும் குறைக்கலாம். அப்படி நினைக்கிறபோது நிதி வசதி தடையாக இருக்கிறது. அதிகமாக நிதி வசதி இருந்தால் அப்படிச் செய்யலாம். அல்லது பள்ளிகளின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டிய நிலைமைக்குப் போகவேண்டும், அப்படிச் செய்தால் 1 : 20 என்ற நிலைமைக்கு விகிதம் வருமானால் மாணவர்களின் சேர்க்கை அளவு தடைப்படும். எனவே பொருளாதார நிலைமை, கல்வியறிவின்மை, இவற்றைக் கணக்கிலேகொண்டுதான் முன்பு

1972 ஆகஸ்ட் 23]

1 : 40 என்று இருந்ததை இப்பொழுது 1 : 35 என்ற அளவுக்குக் கொண்டுவந்திருக்கிறோம். நிதிவசதி ஏற்பட ஏற்பட அதைக் குறைப்பதுபற்றிக் கவனிக்கலாம்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று முன்பு இருந்ததைவிட மாணவர்களின் கல்வித்தரம் குறைவாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது, அப்படிக் குறைந்திருப்பதற்கு ஒரு காரணம் ஆசிரியர்களுடைய கவனக் குறைவுதான் என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்களே, அதன்மீது நம்முடைய அரசு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள இருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தரம் குறைந்தது என்பது விவாதிக்கப்படவேண்டிய ஒன்று. எந்த வகையிலே, எந்த இடத்திலே எந்த நிலையிலே என்று தனித்தனியாகப் பார்த்து ஒவ்வொன்றையும் ஆராயவேண்டும். பொதுவாகச் சொல்வதில் பொருளில்லை. இருபது, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு என்ன சிலபஸ் இருந்ததோ அதே சிலபஸ்தான் இன்னும் இருக்கிறது. முன்பு என்ன என்ன கேள்விகள் கேட்கப்பட்டனவோ அப்படிப் பட்ட கேள்விகள்தான் இப்பொழுதும் கேட்கப்படுகின்றன. ஆகவே சொல்லிக்கொடுப்பதிலே தரம் குறைந்ததாகச் சொல்ல முடியாது. ஏற்கனவே படித்து முன்னேறிய பாரம்பரையிலிருந்து வந்தவர்கள் படிக்கின்ற நிலையில் தரம் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இருக்கத்தான் செய்கிறது. அப்படியில்லாமல் எந்த நிலையில் உள்ளவர்களும் படிக்கலாம், படிக்க வேண்டும் என்ற முறையில் சமுதாயம் வளருகின்ற நிலையில் அவர்கள் படிப்பதிலே பர்சென்டேஜ் ஓரளவு குறைந்திருக்கலாமேதவிர மற்றவற்றைப்பற்றிச் சொல்வதற்கு ஒன்றும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற விகிதாசாரம் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த விகிதாசாரம் எல்லாப் பள்ளிகளிலும் எல்லா மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்படாமல் இருக்கிறது. ஆகவே கண்டிப்பாக ஒரு ஆசிரியருக்கு 35 மாணவர்கள் என்ற வகையில் கட்டாயமாக உத்தரவு பிறப்பிக்க அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சராசரி 35 என்று குறிப்பிட்டேன். சிலவிடங்களில் அது 40 ஆகக்கூட இருக்கும், சிலவிடங்களில் 20, 25 என்ற அளவில்கூட இருக்கக் கூடும். கூடுமானவரையில் சராசரி எண்ணிக்கையைக் குறைப் பதற்கான வகையில், ஏற்கனவே கூறியபடி நிதிவசதி ஏற்பட ஏற்படக் குறைத்துக்கொண்டுவரலாம்.

Chief Educational Officer for Dharmapuri district.

*275 THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any representation has been received from Dharmapuri District M.L.As. requesting to appoint a separate Chief Educational Officer for Dharmapuri district; and

(*b*) if so, when he will be appointed?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) தர்மபுரி மாவட்டத்திற்கெனத் தனியாக முதன்மைக் கல்வி அதிகாரி நியமனம்பற்றிய கருத்து அரசினரால் பரிசிலனை செய்யப்பட்டுத் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த சீப் எஜுகேஷனல் ஆபீசர் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இருக்கும்போது தர்மபுரிக்கு மட்டுமில்லாமல் தர்மபுரி-சேலத்தைச் சேர்த்து வைக்கப் பட்டிருக்கிறது. தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னல் அங்குள்ள பகுதியினருக்கு அதிருப்தி அளிக்கும் என்ற வகையில் உடனடியாக அப்படி ஒரு அதிகாரியை நியமிப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பெரும் மாவட்டங்களுக்கு ஒரு மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரி இருந்து வருகிறார். ஏற்கனவே இரண்டு மூன்று மாவட்டங்களை ஒன்றாகச் சேர்த்து டிவிஷனல் இன்ஸ்பெக்டர் என்ற ஒரு அதிகாரி இருந்தார். திருநெல்வேலி, கன்னியாகுமரி இரண்டுக்கும் சேர்த்து ஒரு தலைமைக் கல்வி அதிகாரி, கோவை, நீலகிரிக்கு சேர்த்து ஒரு தலைமை கல்வி அதிகாரி, சேலம்—தர்மபுரிக்கு சேர்த்து ஒரு தலைமைத் கல்வி அதிகாரி என்று போடப்பட்டிருக் கிறது. தர்மபுரி மாவட்டத்திற்குத் தனியாக ஒரு முதன்மைக்